## இலங்கை பிக்கு பல்கலைக்கழகம் - 2017

---

இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் அறிக்கை, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1996 இன் 26 புத்தசிராவக்க பிக்கு பல்கலைக்கழக அதிகாரச்சட்டம் மற்றும் 2012 இன் 15 ஆம் இலக்க புத்தசிராவக்க பிக்கு பல்கலைக்கழக (திருத்தியது) அதிகாரச்சட்டத்தின் 46 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விபரமான அறிக்கை இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்தின் சங்கைக்குரிய மகோபாத்தியாய அவர்களுக்கு 2018 யூலை 19 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றைத் தீர்மானித்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38

ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்தின் 2017 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அதிகூடியது ரூபா 100,000 பெறுமதியான முற்பணங்கள் பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் வழங்க முடியும் எனினும், 03 சந்தர்ப்பங்களில் அந்த எல்லையினை மிகைத்து ரூபா 605,430 கூட்டுத்தொகையான முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) தாபனக் கோவையின் அத்தியாயம் IX இன் பந்தி 2.2 இன் பிரகாரம், வருகைதரு விரிவுரையாளர்களாக பல்கலைக்கழகத்தில் சேவையாற்றிய 02 அரச உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட படிகளிலிருந்து ரூபா 21,900 இற்கு சமமான 10 சதவீத இறைக் கட்டணத்தினை கழித்திராது முழுமையான தொகை தொடர்புடைய தரப்பினர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பல்கலைக்கழகத்தின் நிதிசார் விளைவினை முன்னைய ஆண்டிற்கான ரூபா 52,229,436 பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ரூபா 48,834,341 பற்றாக்குறையொன்றை விளைவித்திருந்தமையினால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதிசார் விளைவுகளில் ரூபா 3,395,095 முன்னேற்றமொன்றினைச் சுட்டிக்காட்டுகின்றது. தனிநபர் ஊதியங்கள் மீதான செலவினம் ரூபா 16,944,896 இனால் அதிகரித்திருந்ததுடன் நிலையான சொத்துக்கள் மீதான பெறுமானத்தேய்வு ரூபா 5,977,834 இனால் அதிகரித்திருந்த போதிலும், மீண்டெழும் மானியங்கள் ரூபா 28,663,000 இனால் அதிகரித்தமை குறித்த முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளினைப் பகுப்பாய்கையில் 2013 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக பற்றாக்குறையொன்றினை சுட்டிக்காட்டியது. எவ்வாறாயினும், ஊழியர் ஊதியம் மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மீதான பெறுமானத்தேய்வினை நிதிசார் விளைவுகளுக்கு சரிப்படுத்தியதன் பின்னர், ரூபா 79,634,474 தொகையாகக் காணப்பட்ட 2013 ஆம் ஆண்டிற்கான பல்கலைக்கழகத்தின் பங்களிப்பு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தொடர்ச்சியாக அதிகரித்திருந்ததுடன் ரூபா 184,277,425 இனை அடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------------------

### 4.1 செயலாற்றல்

---------------------------------

அரச பல்கலைக்கழகங்களுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அறிமுகப்படுத்தப்பட்ட இலங்கைப் பல்கலைக்கழக முறைமையிலுள்ள கல்விசார் பதவியணியினர்க்கான கல்விசார் கணக்களித்தன்மையின் நடத்தைக் கோவையின் பிரகாரம் (Code of practices on academic accountability for academy staff in Sri Lanka University system) வேலை விதிமுறைகளை அமுல்படுத்தியிராது, குறித்த வழிகாட்டல்களின் அடிப்படையில் பிக்கு பல்கலைக்கழகத்தினால் முறைமைப்படுத்தப்பட்ட முறையொன்றில் (Work norms) கல்விசார் செயலாற்றலினை மதிப்பிடுவதற்கு பல்கலைக்கழகத்தினால் நேர அட்டவணைகள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

---------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புலனாய்வுப் பிரிவு இரவல் பிரிவுகளிலிருந்து கல்விசார் உத்தியோகத்தர்களினால் இரவல் பெறப்பட்ட 64 புத்தகங்கள் தொடர்பில் திருப்பிக்கொடுக்கும் திகதியினை மிகைத்து 02 தொடக்கம் 15 வருடங்கள் காலப்பகுதியொன்று கடந்திருந்தது. நூலகத்திற்கு புத்தகங்களினை திருப்பிப்பெற மற்றும் அந்தப் புத்தகங்களினை திருப்பிக் கொடுக்கத் தவறியமை தொடர்பில் நடவடிக்கைகளினை எடுப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை தேவையான நடவடிக்கையினை முகாமைத்துவ சபை எடுக்கவில்லை.

(ஆ) 2016 ஒக்தோபர் 04 ஆம் திகதிய, 15/2016 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினூடாக அவர்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்ட சுற்றிக்கையுடன் இணங்கியிருக்காத வகையொன்றில் 09 முகாமைத்துவ உதவியாளர் பதவிகளுக்கு மீளாய்வாண்டில் நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் XIX இன் 5.2.3 ஆம் பிரகாரம் மற்றும் 5.8 ஆம் பிரிவின் பிரகாரம் நீர் மற்றும் மின்சாரம் குடியிருப்பாளர்களினால் செலுத்தப்பட வேண்டிய அதேவேளை சமமான பங்கில் ஒவ்வொரு குடியிருக்கும் உத்தியோகத்தரிடமிருந்து விடுதிகளின் பொருளாதார வாடகை அறவிடப்படல் வேண்டும். விடுதிகளில் அங்கு 27 விரிவுரையாளர்கள் குடியிருந்ததுடன், அறை, மற்றும் நீர் மற்றும் மின்சாரத்திற்கான வாடகை தொடர்பில் அவர்கள் ஒவ்வொருவரிடமும் இருந்து ரூபா 500 மாதாந்த கட்டணமொன்று மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. இருப்பினும், மீளாய்வாண்டில் விடுதிகளின் நீர் மற்றும் மின்சார பட்டியல்களுக்கு பல்கலைக்கழக நிதியினூடாக முறையே ரூபா 646,622 மற்றும் ரூபா 547,383 தொகைகள் ஏற்பட்டிருந்தது.

(ஈ) புத்தசரவக்க பிக்கு பல்கலைக்கழக சேமலாப நிதி மீதான துணைவிதியின் பிரகாரம், ஊழியர் சேமலாப நிதியுடனான சம்பந்தத்துடன் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும், ஆனால் அந்த வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் நிதியத்தின் கட்டுப்பாட்டுச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

(உ) 2016 ஆம் ஆண்டில் ரூபா 298,243,258 செலவினமொன்றில் பூர்த்தியாக்கப்பட்டிருந்த, நிறைவேற்றப்படாத மற்றும் அங்கீகரிக்கப்படாத வேலைகளுக்கு 3 - மாடி நூலக கட்டிடத்தின் நிர்மான மேற்பார்வைக்குப் பொறுப்பான பொறியியலாளர் செலுத்துகைகளுக்கு பரிந்துரைந்தமையினால், மேலே குறிப்பிடப்பட்ட தொகை முழுமையாக செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டிருந்த பின்னர் முகாமைத்துவத்தினால் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கையில், ரூபா 1,896,822 பெறுமதியான வேலைகள் சரிப்படுத்தப்பட்டிருந்ததுடன், நிறைவேற்றப்படாத வேலைகள் தொடர்பில் ஒப்பந்ததாரிடமிருந்து ரூபா 5,058,990 தொகையொன்று அறவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மோசடியான செலுத்துகைகளுக்கு பரிந்துரைத்த உத்தியோகத்தருக்கு எதிராக, கணக்காய்வுத் திகதியான 2018 யூலை 30 வரையிலும் அவற்றிற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் திசெம்பர் 28 இல் கொள்வனவுசெய்யப்பட்ட ரூபா 638,000 பெறுமதியுடைய விளையாட்டு உபகரணம் கணக்காய்வுத் திகதியான 2018 யூன் 12 வரையிலும் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 மார்ச் 01 ஆந் திகதிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 04/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், சுயநிதியிடல் நிதிகளின் கீழ் பராமரிக்கப்படுகின்ற பாடநெறிகளுக்கான பாதீடு நேரடி மற்றும் மறைமுகக் கிரயங்களினைத் தனித்தனியாக இனங்காணக்கூடிய வகையொன்றில் தயாரிக்கப்படல் வேண்டும். மேலும், சுயநிதியிடல் பாடநெறிகளின் கல்விசாரா பதவியணியினர்க்கு ஒதுக்கக்கூடிய அதிஉத்தம தொகையான மொத்த மறைமுகக் கிரயத்தின் 10 சதவீதம் வரை மட்டுப்படுத்தப்பட வேண்டுமென குறித்த சுற்றறிக்கையின் 5.2.3 ஆம் பிரிவினால் குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், சுயநிதியிடல் நடவடிக்கைகளின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட 03 பாடநெறிகளுக்கு மீளாய்வாண்டில் பிக்கு பல்கலைக்கழகத்தினால் தயாரிக்கப்பட்ட பாதீடுகளுக்காக, 33 சதவீத வரை குறித்த எல்லையினை மிகைத்து ரூபா 907,000 தொகையொன்று ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் நிதிசார் குழுவின் அங்கீகாரத்தில் செலுத்துகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்தில் இரண்டு மாடி உணவு பரிமாறும் அறை (தான சால), இரண்டு மாடி மாணவர் மையப்படுத்தப்பட்ட கற்கை நிலையம் மற்றும் மாணவர் விடுதிக்கு அடிக்கல் இடுவது தொடர்பில் 2016 நவம்பர் 04 இல் லங்காதீப பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரமொன்றுக்கு ரூபா 327,750 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் குறிக்கோல்களின் அடைதல்

2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் என்பி/எஸ்சிபி/17 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் ஐக்கிய நாடுகள் சபையினால் பின்பற்றப்பட்ட 2030 ''நிலைபேறான அபிவிருத்திக்கான நிகழ்ச்சித்திட்டத்தின்'' உறுப்புறைகளின் பிரகாரம் அவர்களின் பரப்பின் கீழுள்ள செயற்பாடுகளினை பல்கலைக்கழகம் அறிந்திருக்காமையினால், அந்த செயற்பாடுகளுடன் தொடர்புடைய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள் மற்றும் அந்த இலக்குகளின் அடைவுகளினை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பெறுகை மற்றும் ஒப்பந்த செயல்முன்னேற்றம்

#### 6.1.1 பெறுகைகள்

பல்கலைக்கழகத்திற்கு ரூபா 3,888,000 கிரயமொன்றில் 140 இரும்பு Bunk மெத்தைகளுக்கு விலைமனுக்கள் அழைக்கப்பட்டிருந்த போது பெறுகைகள் வழிகாட்டல்களின் 5.3.13 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் ரூபா 40,000 விலைமனு பிணையொன்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அது தொடர்பில் ரூபா 4,000 விலைமனு பிணையொன்று மாத்திரம் பெறப்பட்டிருந்தது. மேலும், குறைந்த விலைமனுதாரருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்த பின்னர், மெத்தைகளினை விநியோகிக்க மறுப்பதன் மூலம் விலையினை அதிகரிப்பதற்கு அவர் முயற்சித்ததுடன் பின்னர், அவர் கட்டளையினை நிறுத்தியிருந்தார். ஆகையினால், போதிய விலைமனு நிச்சயத்தன்மையொன்றை பெற்றுக்கொள்ள தவறியமை காரணமாக, அவரிடமிருந்து குறைந்த விலையில் பொருட்களினைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பம் அதேவேளை கட்டளையினை நிறுத்தியிருந்த விலைமனுதாரியிடமிருந்து அறவிடமுடியுமானதாகக் காணப்பட்ட விலைமனு நிச்சயத்தன்மையின் பெறுமதி, ரூபா 4,000 தொகை மாத்திரம் கூட இழக்கப்பட்டிருந்தது.

#### 6.1.2 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

முன்மொழியப்பட்ட சுவர் மற்றும் நுழைவு வீதியின் நிர்மாணத்திற்கான ஒப்பந்தத்தின் நுழைவு வீதியின் கீழ் கட்டம் II இன் நிர்மாணங்கள் மீது 2018 பெப்ரவரி 22 இல் மேற்கொள்ளப்பட்ட பௌதிக பரீட்சிப்பில் பிடுமன் (Bitumen) பிரயோகிப்பதற்கான வேலை வகை தொடர்பில் பெறப்பட்ட மாதிரிகளின் சராசரி அடர்த்தி 31.5 mm ஆகக் காணப்பட்டது. 40 mm ஆகக் காணப்பட்ட மதிப்பிடப்பட்ட வீதி அடர்த்தியுடன் பெறுமதியினை ஒப்பிடும் பொழுது, ஆய்வுகூட அறிக்கைகளின் பிரகாரம், மாதிரிகளின் கச்சிதம் (Compaction) 90 - 96 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது, ஆனால், திரட்டு அடர்த்தி ''Marshall Density'' தொடர்பில் கச்சிதம் 97 சதவீதத்தினை விட குறைந்ததாகக் காணப்படக் கூடாது, ஆகையினால், குறித்த மாதிரிகளின் உறுதிப்படுத்தலுக்கான பரீட்சிப்பு அறிக்கைகள் தோல்வியான கூற்றொன்றாகக் காணப்பட்டிருந்தது. மேலும், வீதியின் 348.29 சதுரமீற்றர் பரப்பொன்றிற்கு தர உறுதிப்பாட்டு அறிக்கைகளினைப் (அடர்த்தி, கச்சிதம்) பெற்றுக்கொள்ளாது, 2017 நவம்பர் 13 இல் ரூபா 1,692,689 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் சங்கைக்குரிய மகோபாத்தியாய தேரர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்பு |
|---|---|---|
| (அ) | பெறுகைகள் | பெறுகை வழிகாட்டல்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் வேலைகள் மற்றும் விநியோகங்கள் மீதான ஒப்பந்தங்களினை நிர்வகிக்க தவறியமை. |
| (ஆ) | வாகனங்களின் கட்டுப்பாடு | ஓட்ட அட்டவணைகள் மற்றும் தினசரி குறிப்புப் புத்தகத்தினை நாளதுவரையாக்குவதற்கு தவறியமை. |
| (இ) | முகாமைத்துவ செயற்பாடுகள் | கல்விசார் செயற்பாடுகளினை மதிப்பிடுவதற்கு முறைமையொன்றினை அறிமுகப்படுத்துவதற்குத் தவறியமை. |